**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

Calender : | Miscellaneous :

Preliminary Register : | Case No. : **S.C.37/2024**

Sessions :

Deposition of witness for :

Prosecution : **P.W. 2**

Defence : **D.W.**

Court : **C.W.**

| **Name :** | மதுரைவீரன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **11.08.2026.**

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலை.**

**முதல் விசாரணை:**

நான் மாக்காய்குளத்தில் குடியிருக்கிறேன். டிரைவராக வேலைசெய்கிறேன். அ.சா.1 என்அக்கா. இறந்துபோன ராமச்சந்திரன் எனது மாமா. ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் அனைவரும் அவர்களுக்குள் அண்ணன் தம்பி உறவுமுறை. இறந்துபோன ராமச்சந்திரனை நான் அவர் மகள் சென்னையிலிருந்து வருவதால் நானும், அவரும் இருசக்கரவாகனத்தில் மாக்காய்குளத்திலிருந்து அரியலூருக்கு போனோம். இருசக்கரவாகனத்தை அவர் ஓட்டிசென்றார். நான் ஒரு வாகனத்தை ஓட்டிசென்றேன். நான் இருசக்கரவாகனத்தில் முன்பு சென்றுகொண்டிருந்தபோது பின்புறம் சத்தம்கேட்டது. நான் 2கிலோமீட்டர் முன்னாடி சென்று பார்த்தபோது ஆளை காணோம். பின்பு திரும்பி வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்தது. கூட்டமாக இருந்தது அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் குன்னம் நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் முன்பாக கொடுத்ததாகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும்.

அது அ.சா.ஆ.3 ஆகும். நான் வந்தபோது அவர் இறந்துவிட்டார். கூட்டமாக இருந்தது. 108 ஆம்புலன்சு வந்து அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். ஆம்புலன்சில் யார் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. ரசாலாபுரத்திற்கும் அரியலூருக்கும் இடையே அதிக மக்கள் நடமாட்டம் இருக்கும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**இந்நிலையில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசுத்தரப்பில் அனுமதி கோரியதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன் படி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னை போலிசார் விசாரித்தபோது நான் கடந்த 27.08.2022ம் தேதி மாலை வீட்டில் இருந்தபோது எனது மாமா அக்கா ராமச்சந்திரன் அவரது பெரியமகள் அரியலூரிலிருந்து ரயில் வருவதாகவும், என்னை தொலைபேசியில் அழைத்தார். நான் என்இருசக்கர வாகனத்தில் நானும், எனது அக்கா லலிதாவும் ஒரு வண்டியிலும், ராமச்சந்திரன் மாமா அவரது வண்டியிலும் மாக்காய்குளத்திலிருந்து புறப்பட்டோம். அரியலூருக்கு செல்ல ராமலிங்கபுரம் பாரத் கேஸ்குடோனை தாண்டி மாலை சுமார் 04.30 மணிக்கு நானும், அக்காவும் முன்னாலும், மாமா பின்னாலும் சென்றுகொண்டிருந்தோம் என்றும், அப்போது வண்டியுடன் மாமா கீழே விழும் சத்தம்கேட்டது என்றும், நான் திரும்பி பார்த்தபோது நானும் உடனே மோட்டார்சைக்கிளை திருப்பி சென்றோம் என்றும், வெட்டாதீர்கள், அடிக்காதீர்கள் என்று சத்தம்போட்டோம் என்றும், மோட்டார்சைக்கிளில் இருந்து கீழே இறங்கி ஓடிய போது அங்கிருந்த நடராஜன் மகன் செல்லதுரை கையில் வைத்திருந்த அரிவாளல் மாமாவை ஓங்கி வெட்டினார் என்றும், இத்தோடு சாவுடா என்று பின்தலையில் வெட்டினார் என்றும், சிவசாமி மகன் மணிகண்டன், பாண்டியன் மகன் பாலமுருகன், நடராஜன் நம்பிராஜன் ஆகியோர்கள் இரும்பு கம்பி வைத்துகொண்டு மணிகண்டன் மாமாவின் தோள்பட்டையில் அடித்து குத்தி மாமாவின் தலையிலும் அடித்தார் என்றும், பாலமுருகன் மாமாவின் இடது தொடையிலும்,

நம்பிராஜன் இடது முழங்காலிலும் அடித்தார்கள் என்றும், அன்பழகன் மகன் அஜித்தும் சிவசாமியும் வலது முழங்காலில் இரும்பு ராடால் எனது மாமாவை சாவுடா என்று அடித்தார் என்றும், அப்போது பக்கத்தில் ஓடிய என்னையும், எனது அக்காவையும் செல்லதுரை கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி பக்கத்தில் வந்தால் தேவுடியா உனக்கும் இதே நிலைமை தான் என்று எங்களை மிரட்டிகொண்டே வெட்ட வந்தார் என்றும், நாங்கள் திகைத்து நின்றதும் எனது மாமாவை வாரியில் தள்ளிவிட்டார்கள் என்றும், மாமாவின் மோட்டார்சைக்கிளையும் அடித்து நொறுக்கி சுப்பயைா மகன் நடராஜன் மகன் ஓட்டிவந்த காரில் எல்லோரும் ஏறிக்கொண்டார்கள் என்றும், அதில் செல்லதுரையும் மணிகண்டனும் Honda Shine மோட்டார்சைக்கிளில் தப்பித்து சென்றுவிட்டார்கள் என்றும், வாரியில் ரத்தவெள்ளத்தில் கிடைந்த மாமா ராமச்சந்திரனை நாங்கள் இருவரும் தூக்கி பார்த்தபோது இறந்துவிட்டதாக தெரிந்தது என்றும், ஊர்க்காரர்கள் ரோட்டில் சென்றவர்கள் கும்பலாக கூடிவிட்டார்கள் என்றும், எனது அக்கா லலிதா உறவினர்களுடன் குன்னம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும் இந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், அதை நான் போலிஸ் விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரித்தபோதும் வாக்குமூலமாக அளித்தேன் என்றும், மேற்படி எதிரிகளின் மிரட்டலுக்கு அஞ்சி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.ஆ.3ல் உள்ள கையெழுத்து நான் படித்துபார்க்காமல் போட்டேன்.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-Dr. Sathiyamurthy,
Principal District Judge,
Perambalur.